முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

62 | T | I

# முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 10 - 2020
# First Term Test - Grade 10 - 2020

பெயர் : ......................................  நேரம் : 03 மணி. 10 நிமி.

## குடியியற்கல்வி - I

**கவனிக்க :**
- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- இலக்கம் 01 - 40 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள 1, 2, 3, 4 எனும் விடைகளுள் மிகச் சரியான விடையினைத் தெரிவு செய்க.
- உங்களுக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் சரியான விடையினைக் குறிக்கும் இலக்கம் உடைய வட்டத்திற்குள் ( X ) அடையாளமிடுக.

01. தற்காலத்தில் இலங்கை உட்பட உலகின் அநேக நாடுகளில் காணப்படும் நிர்வாக முறை.
(i) அரசாட்சி முறை (ii) உயர் குடிமக்கள் ஆட்சி முறை
(iii) ஜனநாயக ஆட்சி முறை iv) ஜனாதிபதி ஆட்சி முறை

02. கீரேக்க மொழயில் DEMOS, KRATOS ஆகிய சொற்களின் கருத்து
(i) மக்கள், நிர்வாகம் (ii) மக்கள், மக்கள் குழு ஆட்சி
(iii) மக்கள், ஆட்சி முறை (iv) மக்கள், ஜனநாயகம்

03. எதென்ஸ் நகரத்தின் பிரதாக நிர்வாக முறை எவ்வாறு அழைக்கப்பட்டது.
(i) பிரதேச சபை (ii) நகர சபை
(iii) மக்கள் சபை (iv) மாகாண சபை

04. கீரேக்க நகர அரசுகளில் குடிமக்களாக அங்கீகரிக்கப்பட்டவர்கள்.
(i) வயது வந்த ஆண்களும் அடிமைகளும் (ii) வயது வந்த ஆண்களும் வெளிநாட்டவர்களும்
(iii) வயது வந்த ஆண்களும் பெண்களும் (iv) வயது வந்த ஆண்களும் உயர் குடிமக்களும்

05. தீர்மானங்களை எடுக்க நாட்டு மக்கள் அனைவரும் பங்குபற்றுதல் எவ்வாறு அழைக்கப்படும்
(i) பிரதிநிதிகள் ஜனநாயக முறை (ii) நேரடி ஜனநாயக முறை
(iii) தாராள ஜனநாயக முறை (iv) மறைமுக ஜனநாயக முறை

06. கி.பி 5 தொடக்கம் 15ம் நூற்றாண்டு வரை ஐரோப்பாவில் நிலவிய சமூக அமைப்பு
(i) மானிய முறை சமூக அமைப்பு (ii) முதலாளித்துவ சமூக அமைப்பு
(iii) வர்த்தக சமூக அமைப்பு (iv) அரசாட்சி சமூக அமைப்பு

07. மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்ற ஆட்சி விருத்தியுனும் செயற்பாடு ஐரோப்பாவில் ஆரம்பமாகியது.
(i) 1789 பிரான்சிய புரட்சியின் பின்பு (ii) 1776 அமெரிக்க புரட்சியின் பின்பு
(iii) 1688 ஆங்கில புரட்சியின் பின்பு (iv) 1917 ரஷ்ய புரட்சியின் பின்பு

08. " மக்களால் மக்களுக்காக நடாத்தப்படும் மக்களின் ஆட்சி முறை ஜனநாயக ஆட்சி முறையாகும் என்ற கூற்றை கூறியவர்
(i) சீலர் (ii) அரிஸ்டோட்டில் (iii) அபிரகாம லிங்கன் (iv) பேராசிரியர் கானர்

NWP EXAM

09. ஜனநாயக நாடொன்றின் பண்புகளில் ஒன்று
(i) மிகவும் உயர் பொருளாதார நிலை காணப்படல்
(ii) தனிக்கட்சி ஆட்சி முறை காணப்படல்
(iii) சுதந்திர மற்றும் கட்சி சார்பு ஊடகங்கள் காணப்படல்
(iv) அரசாங்க கட்சியும் எதிர் கட்சிகளும் காணப்படல்

10. ஜனநாயக ஆட்சி முறை நிலவும் நாடுகளில் ஆட்சிக்காக பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவது.
(i) நேரடிக ஜனநாயக அடிப்படையில் (ii) பிரதிநிதித்துவ ஜனநாயக அடிப்படையில்
(iii) சர்வ ஜன வாக்குரிமை அடிப்படையில் (iv) பொதுசன கருத்துக் கணிப்பு அடிப்படையில்

11. இலங்கையில் மக்கள் இறைமை அதிகாரத்துக்குள் உள்ளடங்குவது
(i) வாக்குரிமை, அடிப்படை உரிமைகள், அடிப்படை கடமைகள்
(ii) வாக்குரிமை, அடிப்படை உரிமைகள், சுதந்திரம்
(iii) வாக்குரிமை, அடிப்படை உரிமைகள், ஆட்சி அதிகாரம்
(iv) வாக்குரிமை, அடிப்படை கடமைகள், சுதந்திரம்

12. நாடொன்றில் ஆட்சிக்காக தயார் செய்யப்பட்ட கொள்கை வளக்கங்களின் அடிப்படையில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கில் ஒழுங்கமைக்கப்பட்ட தனிநபர்களின் குழு இலகுவாக அமைக்கப்படுவது.
(i) மக்கள் கருத்து என்று (ii) அமுக்கக் குழுக்கள் என்று
(iii) சிவில் சமூக அமைப்புக்கள் என்று (iv) அரசியல் கட்சி என்று

13. தனிக் கட்சி முறையை அடிப்படையாக் கொண்டு ஆட்சி நடாத்தும் நாடுகளுக்கு உதாரணம்
(i) இந்தியா, இலங்கை, அமெரிக்கா (ii) சீனா, வடகொரியா, கியுபா
(iii) சீனா, வடகொரியா, இந்தியா (iv) சீனா, வடகொரியா, இலங்கை

14. 1978 அரசியலமைப்பின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட நேரடி ஜனநாயக பண்பு
(i) பக்கத் தீர்ப்பு (ii) குடி முனைப்பு (iii) திருப்பி அழைத்தல் (iv) பிளேப்றெட் முறை

15. இலங்கை பிரஜை ஒருவருக்கு வாக்குரிமை வழங்கும் போது கவனத்தில் எடுக்கும் நியதி ஒன்று
(i) ஆண்/ பெண் பால் அமைப்பு (ii) தொழில் மற்றம் வருமானம்
(iii) இன வேறுபாடு (iv) தீர்மானிக்கப்பட்ட வயது எல்லை

16. கீழே (அ) நிரலில் உள்ள பண்புகளுக்கு பொருத்தமான பண்புகளை (ஆ) நிரலில் இருந்து சரியாக வரிசைப்படி பொருத்திக் காட்டுவது

| (அ) | (ஆ) |
|---|---|
| (i) பிரஜைகளுக்கு ஆட்சியில் பங்குபற்ற சந்தர்ப்பம் ஏற்படல் | A - நாட்டில் நல்லாட்சியை கட்டியெழுப்புதல் |
| (ii) மக்களின் வாழ்க்கை நிலையில் தரமான அபிவிருத்தியை ஏற்படுத்தல் | B - தேர்தல் ஒன்றில் அபேட்சகராக போட்டியிடல் |
| (iii) சமதானமான சுற்றாடலை கட்டியெழுப்புதல் | C - நாட்டில் வளப் பங்கீட்டு முரண்பாட்டை விருத்தி செய்தல் |
| | D - உணவு, வீடு,கல்வி போன்ற பொதுவசதிகளை விருத்தி செய்தல் |
| | E - நீதியின் மேலாதிக்கம் நிலவுதல் |

(i) AEC (ii) BDE (iii) ADE (iv) CDE


kalvi.lk

17. இலங்கையில் காணப்படும் தேர்தல் மாவட்டங்களின் எண்ணிக்கை
(i) 21 (ii) 22 (iii) 25 (iv) 26

18. ஜனநாயக நாடொன்றில் வாக்காளர் ஒருவருக்குரிய கடமைகளில் ஒன்று
(i) வாக்களித்தல்
(ii) தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்ளல்
(iii) தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் உரை நிகழ்துதல்
(iv) தேர்தல் சட்டதிட்டங்களை மீறாதிருத்தல்

19. பிரஜையொருவருக்கு தனது சமூக வாழ்வை பரிபூரணமாக்குவதற்கு சமூகத்தால் கிடைக்கும் பொறுப்பு
(i) சுதந்திரம் (ii) உரிமைகள்
(iii) சம உரிமை (iv) அடிப்படை உரிமைகள்

20. மனித உரிமைகளை வென்றெடுத்தது தொடர்பாக வரலாற்றில் மிக முக்கிய நிகழ்வாக கருதப்படுவது
(i) கி.பி 1948 டிசம்பர் 10ம் திகதி ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் நிறைவேற்றப்பட்ட மனித உரிமைகள் தொடர்பான உலகப் பிரகடனம்
(ii) கி.பி 1945 டிசம்பரில் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் நிறைவேற்றப்பட்ட மனித உரிமைகள் தொடர்பான உலகப் பிரகடனம்
(iii) கி.பி 1215 பிரித்தானிய மக்னா கார்ட்டா ஒப்பந்தம்
(iv) கி.பி 1689 இல் இங்கிலாந்தில் நிறைவேற்றப்பட்ட உரிமைகள் சட்டம்

21. பின்வரும் செயற்பாடுகளில் ஒழுக்கவியல் சார்ந்த செயற்பாடுகள்
A. அரசுக்கு உரிய வரினளை செலுத்துதல்
B. சட்டத்தை மதித்தல்
C. அரசிலமைப்பை பாதுகாத்தல்
D. முதியோரை மதித்தல்
E. சமூக பழக்க வழக்கங்களை பின்பற்றல்
(i) A யும் B யும் (ii) B யும் C யும் (iii) C யும் D யும் (iv) D யும் E யும்

22. ஜனநாயக நாடோன்றில் நீதிமன்றத்துக்குரிய பிரதான செயற்பாடு
(i) சட்டம் இயற்றுதல்
(ii) நீதியை நிலைநாட்டல்
(iii) சட்டத்தை அமுல்படுத்தல்
(iv) கீழ் நீதிமன்றங்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்குதல்

23. நாடொன்றில் நீதி மன்ற சுதந்திரம் நிலவும் போது மக்களுக்கு கிடைக்கும் நன்மை
(i) மக்களுக்கு நீதி நியாயம் சமமாக கிடைத்தல்
(ii) மக்களுக்கு உண்மையும், சரியான தகவலும் கிடைத்தல்
(iii) ஒழுங்கான நிலையான ஆட்சி உருவாதல்
(iv) மக்கள் பிரச்சினைகளை ஆளும் கட்சிக்கு வழங்குதல்

24. நாட்டில் எல்லாவற்றுக்கும் மேலாக நீதி நிலவுதல் எப்படி அழைக்கப்படும்
(i) நீதியின் சமவுரிமை (ii) நீதியின் நியாயம்
(iii) நீதியின் மேலாதிக்கம் (iv) நீதியை செயற்படுத்தல்

25. அரசு பற்றிய வரைவிலக்கணம் வழங்கிய சிந்தனையாளர்கள் இருவர்
(i) பேராசிரியர் கானர் மற்றும் ஆபிரகாம் லிங்கன்
(ii) சீலர் மற்றும் ஆபிரகாம் லிங்கன்
(iii) பேராசிரியர் கானர் மற்றும் அரிஸ்டோட்டில்
(iv) அரிஸ்டோட்டில் மற்றும் சீலர்

26. " ஒரே இனம் ஒரே நாடு " என்ற கொள்கைப் படி ஐரோப்பாவில் உருவாகிய அரசு

(i) மானிய அரசு　　(ii) அரசாட்சி

(iii) நவீன தேசிய அரசு　　(iv) கீழைத்தேய அரசு

**பின்வரும் வாசகங்களை வாசித்து 27ம், 28ம் வினாக்களுக்கு விடை தருக.**

A - மறுமலர்ச்சி

B - விஞ்ஞான அறிவு வளர்ச்சி

C - தேசிய ஒற்றுமை

D - இராணுவ மற்றும் கடற்படை பலம்

E - சுயாட்சி ஆதிக்கம்

27. தேசிய அரசுகள் உருவாக வழியமைத்த காரணிகள்

(i) AB　(ii) BC　(iii) CD　(iv) CE

28. சில நாடுகள் பலமான தேசிய அரசுகளாக எழுச்சி பெறுவதற்கு சாதாகமான காரணிகள்

(i) AB　(ii) BC　(iii) CD　(iv) CE

29. இரு நிலைகளில் ஆட்சி நடாத்தல் எந்த அரசியலமைப்பின் பண்பாகும்

(i) இணைகூட்டாச்சி அரசியலமைப்பு　　(ii) ஒற்றையாட்சி அரசியலமைப்பு

(iii) அரை கூட்டாச்சி அரசியலமைப்பு　　(iv) கூட்டாச்சி அரசியலமைப்பு

30. ஏதாவதொரு நாட்டின் விருப்பு மற்றும் மக்கள் பொது அபிலாசைகளை பிரயோகமாக செயற்படுத்துவது.

(i) அரசு　　(ii) பொதுமக்கள்

(iii) ஆளும் கட்சி　　(iv) அரசாங்கம்

31. எந்த அரசியலமைப்பில் சட்டத்துறை மூலம் நிறை வேற்றுத் துறை ஆட்சி செய்யப்படுவதில்லை

(i) ஜனாதிபதி அரசியலமைப்பு　　(ii) பாராளுமன்ற அரசியலமைப்பு

(iii) கூட்டாட்சி அரசிலமைப்பு　　(iv) ஒற்றையாட்சி அரசியலமைப்பு

32. இலங்கை ஜனாதிபதியின் மிகமுக்கிய பணி

(i) சட்டத்தை நிலைநாட்டும் பணி

(ii) சட்டத்தை உருவாக்கும் செயற்பாடு

(iii) நீதியை விளக்கும் பணி

(iv) நிறைவேற்றுத்துறையை நிர்வகிக்கும் பணி

33. ஏனையோரின் உரிமைகள் மற்றும் சுதந்திரத்திற்கு மதிப்பளிப்பது

(i) பிரஜைக்குரிய கடமை　　(ii) பிரஜைக்குரிய உரிமை

(iii) அரசின் உரிமை　　(iv) அரசின் கடமை

34. நாட்டில் நல்லாட்சியை கட்டியெழுப்புவதற்காக பங்களிப்புச் செய்யும் அறிவுள்ள வாக்காளர் ஒருவருக்கு இருக்க வேண்டிய பண்புகளில் ஒன்று

(i) தான் விரும்பும் கட்சியில் விரும்பும் பிரதி நிதியை தெரிவு செய்தல்

(ii) குற்றச் செயல்களில் ஈடுபடும் அரசியல் வாதிகளை தேர்தலில் மீண்டும் ஆட்சிக்கு வருவதை தடுத்தல்

(iii) நாட்டை நேசிக்கும் பிரபல்யமான நபரை தெரிவு செய்தல்

(iv) அரசியல் பரம்பரையைச் சேர்ந்த நபரொருவரை தெரிவு செய்தல்

NWP EXAM



kalvi.lk

35. சட்டத்தின் மேலாதிக்கம் நடைபெறும் நாடொன்றில் காணப்படும் பண்பு
(i) சட்டத்தின் பாதுகாப்பு ஆட்சியாளருக்கு அதிகம் கிடைத்தல்
(ii) பிரஜைகளுக்கு அரசாங்கம் மீதுள்ள நம்பிக்கை குறைதல்
(iii) நீதிமன்றத்துக்கு செல்வாக்கு செலுத்துதல்
(iv) சட்டத்தின் பாதுகாப்பு எல்லோருக்கும் சமமாக கிடைத்தல்

36. ஜனநாயக வழியில் வாழும் பிரஜையொருவருக்கு இருக்கக் கூடாத பண்பு
(i) கலந்துரையாடல் மூலம் முடிவெடுத்தல்
(ii) எதிர் கருத்தை பொருத்துக் கொள்ளல்
(iii) ஒத்துழைப்புடன் செயற்படுத்தல்
(iv) பெரும்பான்மையை மதித்து சிறுபான்மையயை அழித்தல்

37. நாடொன்றில் அடிப்படை மனித தேவையாக கருதப்படுவது
(i) உணவு, உடை, வீடு
(ii) உணவு, உடை, அடிப்படை வசதிகள்
(iii) உணவு, வீடு, அடிப்படை வசதிகள்
(iv) உணவு, வீடு, போக்குவரத்து

38. ஜனநாயக நாடொன்றில் பிரஜையொருவருக்கு ஆட்சியில் பங்குபற்றுவதற்கு கிடைக்கும் சந்தர்ப்பம்
(i) அரசாங்கத்தை விமர்சித்தல்
(ii) தேர்தலில் அபேட்சகராக போட்டியிடுதல்
(iii) பொதுசன ஊடகங்கள் மூலம் தனது கருத்தை வெளியிடல்
(iv) அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களில் பங்கு பற்றுதல்

39. ஜனநாயக நாடோன்றில் நீதிமன்ற சுதந்திரத்தை விளக்கிக் கூறுவது
(i) நீதி மன்றத்துக்கு தேவைக்கேற்ப செயற்படுவதற்கு உள்ள திறமை
(ii) நீதி மன்றத்துக்கு எவ்வித நெருக்கடியும் இன்றி இயங்குவதற்கான இடம்பாடு
(iii) நிறைவேற்றத்துறையை தவிர ஏனைய நிறுவனங்களின் நெருக்கடி இல்லாதிருத்தல்
(iv) நீதி மன்றம் சட்டத்துறையின் சட்டத்துக்கு கட்டுப்பட்டு இயங்க வேண்டிருத்தல்

40. இலங்கையில் வடமத்திய மாகாணத்துக்குரிய தேர்தல் மாவட்டங்கள் இரண்டும்
(i) யாழ்ப்பாணம், வன்னி
(ii) பொலன்நறுவை, திருகோணமலை
(iii) அநுராதபுரம், பொலன்நறுவை
(iv) அநுராதபுரம், மாத்தளை

( 1 x 40 = 40 புள்ளிகள்)

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

62 | T | II

# முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 10 - 2020

# First Term Test - Grade 10 - 2020

பெயர் :..................................................... குடியியற்கல்வி - II

**கவனிக்க**

முதலாம வினா கட்டாயமானது.
முதலாம் வினா உட்பட எல்லாமாக 5 வினாக்களுக்கு விடையளிக்க.

01. (i) இலங்கையில் வாக்காளர் ஒருவருக்கு வாக்களிக்க சந்தர்ப்பம் கிடைக்கும் தேர்தல் இரண்டை குறிப்பிடுக.
(ii) இலங்கையில் தற்போது காணப்படும் கட்சிகள் இரண்டைக் குறிப்பிடுக.
(iii) நாட்டை தேர்தல் தொகுதிகளாக பிரிக்கும் போது பயன்படுத்தும் நியதிகள் இரண்டைக் குறிப்பிடுக.
(iv) பாதகம் ஏற்படாத ஏழு தர்மங்களில் இரண்டைக் குறிப்பிடுக.
(v) தேர்தல் தொகுதி மூலம் பிரதிநிதிகள் தெரிவு செய்யும் போது கிடைக்கும் நன்மைகள் இரண்டு தருக.
(vi) கடமைகளின் இரு பகுதிகளும் யாவை?
(vii) அரசியலமைப்பு மூலம் மத்திய அரசாங்கத்துக்கும் பிரதேச ஆட்சி நிறுவனங்களுக்கும் இடையில் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படும் முறையை எடுத்துக்காட்டும் அரசியலமைப்பு வகைகள் இரண்டைக் குறிப்பிடுக.
(viii) அரசியலமைப்புக்களின் அமைப்பு ரீதியாக வேறுபடும் அரசியலமைப்பு வகைகள் இரண்டைக் குறிப்பிடுக.
(ix) சுதந்திரமான நீதியான தேர்தல் ஒன்றில் காணப்படும் இரு பண்புகளை தருக.
(x) ஜனநாயகவாதி பிரஜையொருவரிடம் இருக்க வேண்டிய முக்கிய பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக.

(2 x 10 = 20 புள்ளிகள்)

02. மக்களுக்காக தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் மூலம் நாட்டை நிர்வாகம் செய்தல் பிரதிநிதித்துவ ஜனநாயகம் எனப்படும்.
(i) பிரதிநிதித்துவ ஜனநாயகம் அமுலாக்கப்படும் நாடுகள் இரண்டைக் குறிப்பிடுக.
(ii) ஆட்சி முறையாக நேரடி ஜனநாயகத்தை தற்காலத்தில் அமுல்படுத்தும் போது ஏற்படும் பிரச்சினைகள் மூன்றைக் குறிப்பிடுக.
(iii) ஜனநாயகம் ஆட்சி முறை ஒன்றாக பிரபல்யம் பெற்றுள்ளதற்கான காரணிகள் 3 ஐ எழுதி ஒன்றை விளக்குக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

03. அரசியல் கட்சிகள் ஜனநாயக ஆட்சியின் செயற்பாட்டுக்கு அத்தியவசிய அங்கமாகும்
(i) ஒவ்வொரு கட்டங்களிலிருந்தும் உறுப்பினர்களை தெரிவு செய்வாதற்காக தற்கால அரசுகளில் பெருமளவில் பயன்படுத்தப்படும் பிரதிநிதித்துவ முறைகள் இரண்டைக் குறிப்பிடுக.
(ii) உலகில் காணப்படும் கட்சிகளின் அமைப்புக்கள் மூன்றைக் குறிப்பிடுக.
(iii) போட்டி ரீதியான கட்சி முறையின் நற்பண்புகள் 3 ஐக் குறிப்பிட்டு ஒன்றை சுருக்கமாக விளக்குக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)


kalvi.lk

04. ஜனநாயக ஆட்சிக்காக மக்கள் பிரதிநிதிகளை தொடர்புபடுத்திக் கொள்வதற்கு ஒரு ஏற்பாடாக நாடு தேர்தல் தொகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

(i) உங்கள் மாகாணத்துக்குரிய தேர்தல் தொகுதிகள் இரண்டை பெயரிடுக.

(ii) அரசியலமைப்பு சட்டதுக்கு உட்படுத்த வேண்டிய அம்சங்கள் மூன்றை எழுதுக.

(iii) அரசியலமைப்பு சட்டத்துக்கு ஏற்ப செயற்படும் போது கிடைக்கும் அநுகூலங்கள் மூன்று தருக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

05. தற்போதைய அரசு தேசிய அரசாக கருதப்படும் அதே வேளை தேசிய அரசுகள் ஐரோப்பாவில் 15ம் நூற்றாண்டின் பின்பே நிறுவப்படுகின்றன.

(i) தேசிய அரசு கொள்கையை வலுவூட்டுவதற்காக கருத்து தெரிவித்த சிந்தனையாளர் இருவரைக் குறிப்பிடுக.

(ii) தேசிய அரசுகளின் பிரதான பண்புகள் மூன்று தருக.

(iii) அரசொன்றின் முக்கிய அங்கங்கள் மூன்றைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

06. ஜனநாயக ஆட்சியின் கீழ் தேர்தல் 5லம் மக்களின் பெரும்பான்மை விருப்பத்தின் பேரில் அரசாங்கம் தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்படும்.

(i) “அரசின் அல்லது மக்களின் விருப்பத்தை கொள்கையாக மாற்றி அதை செயற்படுத்தும் பிரதிநிதி அரசாங்கமாகும் ” என்ற கூற்றை கூறியவர் யார்?

(ii) அரசாங்கத்தின் பிரதான பிரிவுகள் மூன்றையும் எழுதுக.

(iii) அரசு மூலம் மக்கள் சமூகத்துக்கு ஆற்ற வேண்டிய பொறுப்புக்கள் மூன்றைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

07. பாராளுமன்ற ஆட்சி முறை உலகுக்கு பிரித்தானியா ஆட்சி முறை ஊடாகவே அன்பளிப்பு செய்யப்பட்டது.

(i) பாராளுமன்ற ஆட்சி முறையில் நிறைவேற்றுத் துறை இரண்டு பிரதான பிரிவுகளாக பிரிக்கப்படும் அவை யாவை?

(ii) பாராளுமன்ற ஆட்சி முறையின் பண்புகள் மூன்றைக் குறிப்பிடுக.

(iii) ஜனாதிபதி ஆட்சி முறையின் பண்புகள் மூன்றைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

NWP EXAM Education අධ්‍යාපන


kalvi.lk

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

# Provincial Department of Education - NWP

## முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 10 - 2020

## First Term Test - Grade 10 - 2020

### குடியியற்கல்வி - விடைப்பத்திரம்

### பகுதி I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | 3 | (11) | 3 | (21) | 4 | (31) | 1 |
| (2) | 1 | (12) | 4 | (22) | 2 | (32) | 1 |
| (3) | 3 | (13) | 2 | (23) | 1 | (33) | 1 |
| (4) | 4 | (14) | 1 | (24) | 3 | (34) | 2 |
| (5) | 2 | (15) | 4 | (25) | 3 | (35) | 4 |
| (6) | 1 | (16) | 2 | (26) | 3 | (36) | 4 |
| (7) | 3 | (17) | 2 | (27) | 1 | (37) | 1 |
| (8) | 3 | (18) | 4 | (28) | 3 | (38) | 2 |
| (9) | 4 | (19) | 2 | (29) | 4 | (39) | 2 |
| (10) | 3 | (20) | 1 | (30) | 4 | (40) | 3 |

( 1 x 40 = 40 புள்ளிகள்)

### பகுதி II

01. (i) ஜனாதிபதி தேர்தல், பொதுத் தேர்தல், மாகாணசபைத் தேர்தல், உள்ளூராட்சித் தேர்தல்

(ii) ஐக்கிய தேசிய கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி, மக்கள் விடுதலை முன்னனி
ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, தமிழ் தேசிய கூட்டமைப்பு, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்
மலையக மக்கள் முன்னனி,

(iii) நிலப்பரப்பு, சனத்தொகை

(iv) எந்நேரமும் கூட்டம் கூடுதலும் கலந்துரையாடலும்
ஒற்றுமையாக கூடுதல் ஒற்றுமையாக கலந்துரையாடல் ஒற்றுமையாக களைதல்
விதிக்காத சட்டங்களை விதிக்காதிருத்தல், விதித்த சட்டங்களை அமுலாக்குதல் அவற்றை பின்பற்றல

(v) மக்கள் சமூகத்தில் உள்ள இனம், மொழி, குலம் போன்ற வேறுபாடகளை கவனியாது எல்லோரினதும் எண்ணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தில் பிரதிநிதியை தெரிவு செய்யும் சந்தர்பம் கிடைத்தல்.
அரசியல் செயற்பாட்டை இயக்கிச் செல்வதற்கு தேவையான தலைவர்கள் பிரதேச மட்டத்தில் உருவாக வழிவகை செய்தல்
தேர்தல் தொகுதிக்கு பொறுப்பு கூறும் பிரதிநிதி ஒருவரை தெரிவு செய்யும் சந்தர்ப்பம் கிடைத்தல்
பிரதேச அபிவிருத்திக்கு இடமளித்தல்.

(vi) சட்டரீதியான பொறுப்பு, ஒழுக்க ரீதியான பொறுப்பு

(vii) ஒற்றையாட்சி/ கூட்டாட்சி

(viii) அமைச்சரவை/ ஜனாதிபதி

(ix) உரிய காலத்தில் தேர்தல் நடாத்தல்.
உரிய தகுதிகளை பெற்ற பிரஜைகளுக்கு வாக்குரிமை, அபேட்சகர் உரிமை கிடைத்தல்.
சுதந்திரமாக தேர்தல் பணிகளில் பங்களிப்புச் செய்யும் உரிமை கிடைத்தல்ஸ.
தேர்தல் சட்டதிட்டங்களின் படி தேர்தல் நடாத்துதல்.
சமாதான சூழலில் தேர்தல் நடாத்தல்.

(x) கலந்துரையாடி முடிவெடுத்தல், எதிர் கருத்தை பொருத்தல்
பெரும்பான்மை கருத்தை மதித்தல், ஒத்துழைப்போடு பணியாற்றல், சட்டத்தை மதித்தல்



kalvi.lk

02. (i) விடையின் படி புள்ளி வழங்குக.

(ii) தற்போதய அரசுகளின் நிலப்பரப்பு அதிகரித்தல்
தற்போதய அரசுகளின் சனத்தொகை அதிகரித்தல்
சகல மக்களையும் ஓரிடத்துக்கு ஒன்று சேர்க்க முடியாதிருத்தல்
சமூக தேவைகள் அதிகரித்தல்

(iii) அது மக்கள் விருப்பத்தின் பேரில் நடைபெறுகின்றமை
ஆட்சிக்கு பிரதிநிதிகள் பெரும்பான்மை மக்களின் விருப்பத்தின் படி தெரிவு
ஆட்சியுரிமை அதிக பிரதிநிதிகள் உள்ள கட்சிக்கு அல்லத குழுவுக்கு கிடைத்தல்
தேர்தல் மூலம் தெளிவான பிரதிநிதிகளின் பெரும்பான்மை முடிவின்படி சட்டம் இயற்றப்படல்

03. (i) இலகுவான பெரும்பான்மை பிரதிநிதித்துவ முறை மற்றும் விகிதாசார பிரதிநிதித்துவ முறை

(ii) ஒரு கட்சி, பல கட்சி, இரு கட்சி

(iii) மக்கள் விருப்பு பிரதிநிதித்துவத்துக்கு உள்ள தேவை அதிகரித்தல்
முறை கேடான ஆட்சி தடுக்கப்படல்
அரசாங்கத்தின் மோசமான கொள்கைகள் விமர்சனம் மூலம் சரிபடுத்தல்
மக்கள் சமூகத்தின் பல்வகைமை வெளிக்காட்டப்படல்
வேறுபாடுகள் மூலம் ஒற்றுமையை கட்டியெழுப்புதல்

04. (i) குருநாகல்/ புத்தளம்

(ii) அரசாங்கத்தின் பிரதான அம்சங்களாகிய சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை அமையும் மாதிரி
மேற்படி நிறுசனங்களின் பொறுப்புகள், சட்ட அதிகாரங்கள் இடைத்தொடர்புகள் என்பவற்றின் அமைப்பு
அரசாங்கத்துக்கும், பிரஜைகளுக்கும் இடையிலான தொடர்பின் அமைப்பு
பிரஜைகளின் அடிப்படை உரிமைகள்
அரசியலமைப்பு திருத்தம் தொடர்பான ஏற்பாடுகள்

(iii) ஆட்சி ஒழுங்கமைப்பும், நிலையான தன்மையும் பாதுகாக்கப்படல்.
பிரஜைகள் உரிமை பற்றி ஆட்சியாளரும் ஆளப்படுவோரும் தெளிவு பெறுதல்.
ஆட்சியாளரின் எதேச்சரிதிகாரமான செயற்பாடுகளை தடுத்தல்.
நீதிமன்ற சுதந்திரம் பாதுகாக்கப்படல், அடிப்படை உரிமைகள்
சட்டத்தின் பாதுகாப்பு அனைவருக்கும் சமமாக கிடைத்தல்.
அரசாங்க நிறுவனங்கள் மூலம் நாட்டுமக்களுக்கு தேவைகள் நிறைவேற்றப்படல்.

05. (i) நிகலோஸ் மக்கியாவள்ளி, ஜீன் பொருடன், தோமஸ் ஹொப்ஸ்

(ii) ஒரு இனத்துக்கு ஒரு நாடு என்ற கொள்கை அடிப்படையில் அமைத்தல்
நிலப்பரப்பு, சனத்தொகை, அரசாங்கம், சுயநிர்ணயம், என்பவற்றை கொண்டிருத்தல்
தொழில்சார் அதிகாரமுள்ள குழுவால் நாடு நிர்வகிக்கப்படல்
உள்நாட்டு வெளிநாட்டு நடவடிக்கைகளில் சுயநிர்ணயம் அதிகாரம் கிடைத்தல்

(iii) நிலப்பரப்பு
சனத்தொகை
அரசாங்கம்
சுயநிர்ணயம்

06. (i) பேராசிரியர் கானர்

(ii) சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை

(iii) சட்டத்தையும் சமாதானத்தையும் பாதுகாத்தல்.
சமவுரிமை தத்துவத்தை பாதுகாத்தல்
அரசியலமைப்பு சட்டபடி செயற்படல்.
சட்டத்தின் சமவுரிமையை பாதுகாத்தல்

07. (i) பெயரளவு நிறைவேற்றுத்துறை, அரசியல் நிறைவேற்றுத்துறை, உண்மை நிறைவேற்றுத்துறை

(ii) இது பெயரளவு நிறைவேற்றுத்துறை, உண்மை நிறைவேற்றுத்துறை என இரு பகுதிகளைக் கொண்டது.
சட்டத்துறை மூலம் நிறைவேற்றுத்துறை தேர்வாதல்
சட்டத்துறைக்கும் நிறைவேற்றுத்துறைக்கும் இடையில் நேரடி தொடர்பு நிலவுதல்
நிறைவேற்றத்துறை தனது செயற்பாடுகள் பற்றி சட்டத்துறைக்கு பொறுப்புக் கூறல்
நிறைவேற்றுத்துறையை நீக்குவதற்கு சட்டத்துறைக்கு அதிகாரம் உண்டு

(iii) நிறைவேற்றுத்துறையை ஜனாதிபதி இயக்குவர்
அரசின் தலைவரும், அரசாங்கத்தின் தலைவரும் ஜனாதிபதியாவர்
நிறைவேற்றுத்துறை சட்டத்துறைக்கு பொறுப்புக் கூற நேரடியாக கட்டுப்படாது
சட்டத்துறை மூலம் நேரடியாக நிர்வாகத்துறையை நிருவாகம் செய்தல் இடம்பெறுவதில்லை

Education கல்வி අධ්‍යාපන

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான
மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில
மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

**Whatsapp
075 287 1457**